# மேற்கத்திய கம்பா (Khampa Western)




**Population:**
206,400 (2000)
254,200 (2010)
313,100 (2020)

**Countries:** China, India, probably Nepal

**Buddhism:** Tibetan

**Christians:** 10

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Kham, Khamba

**மக்கள்தொகை:** 157,700 in China (1987,Language Atlas of China); 1,221 in India (1981 census); Probably also in Nepal

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, வட திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 2 (Ger-rtse, Nagchu)

**திபெத்திய புத்தமதம்:** 99%

**கிறிஸ்துவம்:** 0.01%

**வேதாகமம்:**சில பகுதிகள் கி.பி.1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசுதிரைப்படம்:**இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : KHG03

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** மத்திய மற்றும் வட திபெத்தின் மிகப்பரந்த ஙாரி (Nghari) மாகாணத்தில் வசிக்கும் 2,20,000 திபெத்தியர்கள் மேற்கத்திய கம்பா மொழியைப் பேசுகின்றனர். இவர்களது ஜனத்தொகை அடர்த்திக் குறைவாக நீளமான தடம்போல வடகிழக்கு பகுதியிலிருந்து வட பகுதிவரை ஏறக்குறைய மத்திய திபெத் முழுவதும் பரவுகிறது. இப்பகுதி முழுவதும் ஏறக்குறையப் பாலைவனம்போலத் தோற்றமளிக்கும் உயர்வான பீடபூமியாகும். ' பதினேழாயிரம் அடிகள் உயரத்தில் (5,180 மீட்டர்கள்) காற்று மண்டலம் அடர்த்திக் குறைந்து கடல் மட்டத்தில் உள்ளதைக் காட்டிலும் பாதியளவு பிராணவாயு மட்டுமே கொண்டுள்ளது.' கி.பி.100 லேயே ஒரு சீன அதிகாரி திபெத்திய பீடபூமியை "தலைவலி மலைகள்" என விவரித்தார்.

**அடையாளம்:** கம் (Kham) என்பது முன்னாட்களில் திபெத்தின் ஒரு மாகாணமாகும், பா (Pa) என்கிற பின்னொட்டு திபெத்திய மொழியில் மக்கள் என்னும் பொருள்தரும் எனவே கம்பா என்பதின் பொருள் கம்மில் வசிக்கும் மக்கள் ஆகும். இப்பகுதியைச் சீனா, சிங்ஹாய் மற்றும் சிசுவான் மாநிலத்தோடு இணைத்தது; ஆனால் மேற்கத்திய கம்பாக்கள் முழுவதும் திபெத்திற்குள் வாழ்ந்துவருகின்றனர். சிறு எண்ணிக்கையிலான மேற்கத்திய கம்பாக்கள் வட இந்தியாவில் குறிப்பாக ஹிமாச்சல் பிரதேசம் மற்றும் உத்திர பிரதேசத்தில் வாழ்ந்துவருகின்றனர். இந்தியாவின் கி.பி. 1981 ன் மக்கள்தொகை கணக்கெடுப்பின்போது இவர்களது எண்ணிக்கை 1,221 ஆக இருந்தது.

**மொழி:** மேற்கத்திய கம்பா மொழியை மத்திய திபெத்திய மொழி அல்லது அம்தோ மொழி பேசுபவர்களால் புரிந்துகொள்ளமுடியாது. ஏறக்குறைய இங்கிலாந்தின் பரப்பளவைப்போலப் பரப்பளவுடைய மிகப்பரந்த பகுதியில் வாழ்ந்தாலும் கூட மேற்கத்திய கம்பா மொழியில் இரண்டு வட்டார மொழி வழக்குகள் மட்டுமே உள்ளதாகக் கூறப்படுகிறது.

**பழக்கவழக்கங்கள்:** கம்பாக்கள் உலகிலேயே கடுமையானது எனக் கருதப்படும் சூழ்நிலைகளில் ஒன்றில் வாழ்ந்துவருகின்றனர். இவர்கள் தங்களது பாரம்பரியமான முழுக்கை அங்கியை அணிகிறார்கள்; ஒரு நீளமான பட்டயத்தை உள்ளே மறைக்கத்தக்க இடுப்புக் கச்சையைக் கட்டுகிறார்கள். அநேகர் அதிஷ்ட மணி, மந்திரச் சங்கிலி அல்லது தாயத்துப் பெட்டிகளைக் கழுத்தில் அணிகிறார்கள். குதிரையில் சுற்றுகிற கம்பா ஆண்கள் ஆயுதம் தரிக்காமல் இருப்பதில்லை. பல பதி (சகோதரர்கள் ஒரே பெண்ணைத் திருமணம் செய்வது) திருமணம் இன்னும் சில இடங்களில் நடந்துவருகிறது. கடுமையான பீடபூமியில் வசிக்கும் கம்பா மக்களின் சராசரி வயது 45 மட்டுமே ஆகும்.

**மதம்:** கம்பாக்கள் தங்களுக்கு வழிகாட்டப் பேய்கள், அசுத்த ஆவிகள் மற்றும் உடலைத் துறந்த தெய்வங்களின் ஆவிகள் மேல் நம்பிக்கை வைக்கின்றனர். அநேகத் துறவிகள் கொடூரமான ஆவிகளை அழைக்கக்கூடியவர்கள், சில நேரங்களில் இவை உருவமெடுத்து இவர்கள் முன் தோன்றுகின்றன. அதிகப் பக்தியுள்ள துறவிகள் தங்களை ஆவியில் ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டுசெல்லக்கூடியவர்கள் எனக் கூறப்படுகிறது, மேலும் இவர்கள் வெகுதூரமுடைய வெவ்வேறு இடங்களில் ஒரேநாளில் தோன்றுவதாக நம்பப்படுகிறது. இவர்கள் யமா என்கிற கடவுளையும் ஆராதிக்கின்றனர். இக்கடவுளே பாதாளத்தின் ராஜா என்றும் தங்களுடைய வாழ்க்கையின் சகல காரியங்களையும் ஆளுகிறார் என்றும் நம்புகின்றனர்.




**கிறிஸ்துவம்:** முன்னாட்களில், திபெத்திற்குள் செல்ல அனுமதி கிடைக்காத சில மிஷனெரிகள் ஒரு டஜன் யாக் எருமைகளின்மேல் (Yak) திபெத்திய கைப்பிரதிகளின் மூட்டைகளை ஏற்றிப் பரந்த திபெத்திய எல்லைகளின் வழியாக அனுப்பிவிட்டனர். ஒருவர் கி.பி.1920 களில் இவ்வாறு வருத்தப்படுகிறார் "இப்பகுதியில் தங்கி பணி செய்யும் மிஷனெரிகள் இல்லாத நிலையிலிருப்பது மட்டுமல்லாமல் ஓரிரு முனைகளைத் தவிரக் கிறிஸ்துவின் வேவுக்காரர்களாலும் கூடத் தொடப்படாத நிலையில் உள்ளது...இவை மேற்கு சீனாவின் வெல்லப்பட வேண்டிய பகுதிகளாகும். இங்குப் பரந்த இடங்கள் அறியப்படாத நிலையில் உள்ளன இன்னும் பெரிய இடங்கள் மறைந்துள்ளன."